மாம்பாடி ஆதி திராவிடர்களின் சுடுகாடு கோரிக்கை

*4256 திரு. எம். அண்ணாமலை :

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அரூர் வட்டம், மாம்பாடி ஆதி திராவிடர்கள் சுடுகாடு கோரி வருவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

10-30 மணி

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): தர்மபுரி மாவட்டம், அரூர் வட்டம் மாம்பாடி கிராமத்திலே ஆதி திராவிடர்களுக்கு சுடுகாடு கோரி மனுக்கள் ஏதும் வரவில்லை. எனினும் தற்போது சட்டமன்றப் பேரவையில் வினா எழுப்பப்பட்டதன் காரணமாக மாம்பாடி கிராமத்திலிருக்கும் ஆதி திராவிட மக்களுக்கு இடுகாடு அமைக்க அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். அண்ணாமலை : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மாம்பாடி கிராமத்தினுடைய சுடுகாட்டுப் பிரச்சினை என்பது கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாகவே, அங்கிருந்த சுடுகாடு நிலம், புறம்போக்கு நிலம், சிலர் ஆக்கிரமிப்பின் காரணமாக இடம் தெரியாமல் பட்டா நிலத்தில் பிரேதத்தை வைத்துவிட்டு, அது ஒரு மிகப் பெரிய கலகமாக மூண்டு, அதை கலெக்டர், டி. எஸ். பி. போன்ற பல முக்கியஸ்தர்கள் எல்லாம் சேர்ந்து மிகப் பெரிய பதட்டமான நிலையில் அந்தப் பிரேதத்தை எடுத்து வேறு இடத்திலே புதைக்க வேண்டிய ஒரு அவலநிலை ஏற்பட்டது. ஆகவே இத்தகைய நிலைமைகளையெல்லாம் கருதி, அவசரமாக அரசு அந்த சுடுகாட்டுப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முன்முயற்சி எடுக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன்: துணைத் தலைவர் அவர்களே. ஆதி திராவிட மக்களுக்கு குடியிருப்புப் பாதை, மயானப் பாதை இவை பற்றி முன்பே அமலில் உள்ளது. இத்திட்டத்தின்கீழ் வீட்டு மனைக்கு புறம்போக்கு

1990 சனவரி, 27]

நிலங்கள் கிடைக்காத போதும், பட்டா நிலங்களை கையகப் படுத்தி வீட்டு மனைக்கு பட்டாக்கள் கொடுக்கவும், அதே போன்று மயானப் பாதைகளுக்குக் கொடுக்கவும் அரசு தக்க நடவடிக்கை எடுத்து, அவை செய்து கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். அண்ணாமலை : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, முதலில் இதற்கான நிலத்தை ஆர்ஜிதப்படுத்த அரசு முற்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது இருக்கட்டும். இங்கே நான் கவனிக்க வேண்டுவது இருந்த சுடுகாடுகளே ஆக்கிரமிப்பில் உள்ளதால் அந்த ஆக்கிரமிப்புகளை அப்புறப்படுத்தவேண்டும். இந்த சுடுகாட்டுப் பிரச்சினை கூடவே இன்றைக்கு நடைபாதை என்பதும் முழுவதுமாக ஆக்கிரமிப்பிலே இருக்கிறது. ஆகவே இன்றைக்கும் பல கிராமங்களில் இது போன்ற ஒரு துன்பகரமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இது ஒரு சாதாரண விஷயம் தான். ஒரு கிராமம் இருந்தால் அதற்கு ஒரு சுடுகாடு உண்டு. நடைபாதை உண்டு. இவையனைத்தும் ஆக்கிரமிப் மிப்பில் உள்ளதால் இந்த ஆக்கிரமிப்பை அரசு நிர்வாகம் அப்புறப்படுத்தத் தவறியதன் காரணமாக பிரேத அடக்கத்தின் நேரங்களில் அது கலகமாக மூள்கிறது. ஆகவே இந்த அரசு வினயப்பூர்வமாக இந்தப் பிரச்சினையைப் பார்த்து தீர்ப்பதற்கு முன் முயற்சிகளை எடுக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : துணைத் தலைவர் அவர்களே, இதுபற்றி அரசு தக்க நடவடிக்கையை கூடிய விரைவிலே எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆதி திராவிட, பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு
கல்வி உதவித் தொகை, கடனுதவி.

* 5191 திரு. ச. அழகுவேலு :

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கல்லூரிகளிலும் மேல்நிலைப் பள்ளிகளிலும் கல்வி பயிலும் ஆதி திராவிட, பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு அளிக்கப்படும் கல்வி உதவித் தொகையும், கடனுதவியும் உரிய காலத்தில் மாணவர்களுக்குக் கிடைப்பதில்லை என்பதை அரசு அறியுமா ?

(ஆ) உரிய காலத்தில் கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?